
கோவையில் முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி அவர்களின் 81வது பிறந்தநாளையொட்டி கோவை புகைப்பட நிபுணர் கோவை சுப்பு ஏற்பாடு செய்த புகைப்படக் கண்காட்சியை முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி பார்வையிட்டார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாள்!

# சேலம் கிழக்கு மாவட்டத்தில் அமைதிப் பேரணி - சிலைக்கு மரியாதை!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. வேண்டுகோள்!



சேலம், ஆக. 5-

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

உலக தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளில், மறைந்தும் மறையாமல் நம்முடைய நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவை போற்றும் வகையில் 07.08.2025 வியாழன் கிழமை காலை 8 மணி அளவில் வாழப்பாடி பேருந்து நிலையம் முதல் வாழப்பாடியில் உள்ள மாவட்ட கழக அலுவலகம் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் வரை அமைதி பேரணியாக சென்று தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளோம்.

ஜனநாயகம், சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை, உள்ளிட்ட அனைத்து முற்போக்கு லட்சியங்களுக்காவும் தனது வாழ்நாள் முழுவதும் வாதாடி போராடி ஆட்சியிலிருந்த நேரங்களில் உன்னத நோக்கங்களை நிலைநாட்டிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தாலும் அவர் மீது கொண்ட கொள்கையாலும் சரித்திர சாதனைகளாலும் கலாச்சார நினைவுகளோடு நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாளையொட்டி ஏழை, எளிய பொது மக்களுக்கும், ஆதரவற்றோர் முதியோர்களுக்கும் பல்வேறு நலத்திட உதவிகளை செய்திட வேண்டும். அவரவர் பகுதிகளில் வீட்டு முன்பு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டும்.

இந்நிகழ்வில் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், இன்னாள், முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், மற்றும் கிளை கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கரூர் மாவட்ட செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி அறிக்கை!



கரூர், ஆக. 5-

கரூர் மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் இன்று (5.08.2025 செவ்வாய்க் கிழமை) காலை 10.00 மணிக்கு கரூர் மாவட்ட கழக அலுவலகம் (கலைஞர்அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர்நன்னியூர் ராஜேந்திரன்,

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், கழக நெசவாளர் அணிசெயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் MLA, அரவக்குறிச்சிசட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ MLA, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாம சுந்தரி MLA, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர்முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணை செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணைசெயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக்கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்துஅணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

பொருள் :

1.ஆகஸ்ட் 7 ஆம்தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள்


2.கழக வளர்ச்சி பணிகள்

இவ்வாறு மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி தலைமையில்

# முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் 7 வது நினைவு நாள் - அமைதிப் பேரணி!

## மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!



கோவை,ஆக.-

தகைமைசால் தலைவராக, தலைசிறந்த நிர்வாகியாக,தமிழ்நாட்டின் ஐந்து முறை முதலமைச்சராக,உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும்,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து,அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாக த் திகழ்ந்த முத்தமிழறிஞர், செம்மொழிக் காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் 7 வது நினைவு நாளையொட்டி,

மாநகர் மாவட்ட திமுக சார்பில், 2025 ,ஆகஸ்ட் 7 அன்று காலை 8.00 மணிக்கு, ”அமைதிப் பேரணி”, கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி தலைமையில்,

கோவை சித்தாபுதூர்,வி.கே.கே.மேனன் சாலை, ஆவாரம்பாளையம் சாலை சந்திப்பில் இருந்து புறப்பட்டு, காந்திபுரம் அண்ணா சிலை அருகில் உள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில், கோவை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர், மாநகர் மாவட்ட திமுகழக நிர்வாகிகள்,மேயர், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள், வட்டக்கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள்,தலைவர்கள்,துணை அமைப்பாளர்கள்,துணைத் தலைவர்கள்,

பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள், கழக செயல்வீரர்கள், BLA2 பூத் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் முத்தமிழறிஞரின் நினைவைப் போற்றி, அஞ்சலி செலுத்த,தவறாமல் திரண்டு வர வேண்டும் என்று,கோவை மாநகர் மாவட்ட திமுக சார்பில், கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நா.கார்த்திக் தெரிவித்துள்ளார்.



சேலம் மாவட்டம் தலைவாசல் மத்திய ஒன்றியம் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமை ஒன்றிய செயலாளர் சாத்தப்பாடி மணி துவக்கி வைத்தார். இம்முகாமில் பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்கள் மீது விசாரணை நடத்தி சான்றிதழ் வழங்கினர். இதில் முன்னாள் எம்.எல்.ஏ, குணசேகரன், வடக்கு ஒன்றிய செயலாளர் பாலமுருகன், தேவேந்திரன் மற்றும் அனைத்துத் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# அதிகார நந்தியும் அவதார நந்தியும்

## ‘கணையாழி’ தலையங்கம்




உடல் நலம் பெற்றுப்
பணிக்குத் திரும்பியிருக்கும்
முதல்வரை வாழ்த்துவோம்!

பொதுமக்கள் பயன்பெற
“நலம் காக்கும் முகாம்” போலவும்
பணிகளைச் செய்திருக்கிறான்
கங்கை கொண்ட சோழன்!

கோயில் கட்டினான்
கங்கை நீரைக் கொண்டுவந்து
தலைநகரைப் புனிதமாக்கினான்
என்பதோடு
மக்கள் நலம் பேண
மருத்துவ மனைகள்!
ஆரோக்கிய சாலைகள்
மருத்துவ மண்டபங்கள்
‘வியாதிப்பட்டுக்’ கிடைக்கும் நோயாளிக்கு
வைத்தியம், உணவு, தங்கும் வசதிகள்
கட்டணம் இல்லாமல் கிடைக்கச் செய்தவன்
கங்கை கொண்ட சோழன் என்றும்
கல்வெட்டுகள் சொல்கின்றன.

முதலாம் இராசேந்திர சோழனைக் காண
வந்து சென்றிருக்கிறார் பிரதமர்!
தானே கங்கை கொண்ட சோழனாகக்
கைகளில் கங்கை நீர்ச் சொம்பு!
கங்கை கொண்ட சோழ ஈசுவரருக்கு
நரேந்திர சோழரின் தீப ஆராதனை!
இராசேந்திர சோழனுக்கும்
கிடைத்திராத வாய்ப்பு!

முதலாம் இராசேந்திரனின்
இயற்பெயர் மதுராந்தகன்!
வரலாறு சொல்லும் பெயர்
கங்கை கொண்ட சோழன்!

பிரதமரைப் போல கைச் சொம்பில்
கங்கை நீரைக் கொண்டு வந்ததால்
கங்கை கொண்ட சோழன் ஆகவில்லை.

காசிக்குச் சென்று
கங்கைநீர்ச் சொம்போடு
வருகிறவர்கள் எல்லாம்
கங்கை கொண்ட சோழர்கள் இல்லை!
கங்கை வரை சென்று
வென்று வந்ததால்
கங்கை கொண்ட சோழன்!
‘சலமயமான சயத்தம்பம்’
நாட்டியவன் என்று
திருவாலங்காடு செப்பேடு சொல்கிறது!
தந்தை இராசராசனும்
பெறாத வெற்றி என்பதால்
தலைநகர் பெயரே
கங்கை கொண்ட சோழபுரம்!

தஞ்சையில் இராசராசேச்சுவரம் என்றால்
தனக்குக் கங்கை கொண்ட சோழேச்சுரம்!
தான் உருவாக்கிய ஏரிக்குச்
சோழகங்கம்!

எல்லாவற்றிலும் கங்கையை
இணைத்துக் கொண்டவன்.
“கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி” என்ற
சிலப்பதிகார வரிகளைச்
செயலில் காட்டிய
கங்கை கொண்ட காவிரி நாடன்!

தந்தைக்குத் “திருமகள் போல”
மெய்க்கீர்த்தி என்றால்
தனக்குத் “திருமன்னி வளர.”

“வங்க பாலர்கள்”,நூலில்
ஆர்.டி.பானர்ஜி சொல்கிறார்
கங்கைப் படையெடுப்பில் சென்று
மேற்கு வங்கத்தில் தங்கிய படைத் தலைவன்
சாமந்த சேனன் மரபினர்தான்
வங்கத்தை ஆண்ட
வங்க சேன் மரபினராம்.

வங்கச் சைவ மரபுக்கும்
தமிழ்ச் சைவ மரபுக்கும்
கூட்டணியை உருவாக்கியவன்
கங்கை கொண்ட சோழனாம்!

வணிகத்தைப் பெருக்கக்
கடல் கொள்ளையைத் தடுக்கக்
கடலாண்ட காவலன்!
“பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட
கோப்பரகேசரி”ஆகியிருக்கிறான்!

சிவன் கோயில்களில் நந்தி இருக்கும்!
சாதாரண நந்தி
பெரிய நந்தி
கைலாச நந்தி
அதிகார நந்தி
அவதார நந்தி என்று
ஏதாவதொரு நந்தி
எல்லாச் சிவன் கோயில்களிலும் இருக்கும்!

கங்கைகொண்ட சோழேச்சுரத்தில்
இருப்பது அதிகார நந்தி!

ஆயுதம் எடுக்காமல் நடத்துகிற
வணிகப் போரில்
இப்போது பல நாடுகளையும்
மிரட்டிக் கொண்டிருக்கிறது
ஓர் அதிகார நந்தி!

நான் சொன்னால் போர்!
நிறுத்தச் சொன்னால் சமாதானம்!
இல்லையென்றால் அபராதம்!

கட்டைப் பஞ்சாயத்து நிலையில்
உலக அரசியல்!
வல்லரசு என்றால்
நல்லரசாக இருக்க வேண்டாமா?

உலகுக்கே
ஜனநாயக வகுப்பு எடுக்கிறவர்கள்
முன்மாதியாக இருக்க வேண்டாமா?
ஜனநாயகம் என்பது
பெரும்பான்மை மக்களுக்கானது
என்பதில்லை
சிறுபான்மை மக்களுக்குமானது என்பதை
உணர்த்த வேண்டாமா?
இப்படியெல்லாம்
கற்றுக்கொள்ள நிறையவே இருக்கின்றன
கங்கை கொண்ட சோழனிடம்!

கங்கை கொண்ட சோழனுக்குக்
கப்பல் படை இருந்தது!
ஆனாலும்
சீனாவுக்குத் தூதுக்குழு அனுப்பி
நட்புடன் இருந்ததற்கான
சான்றுகளாகத் தஞ்சையில்
2165 சீனக் காசுகள்!

கங்கை கொண்ட சோழனிடம்
யானைப் படை இருந்தது!
ஆனாலும்
கங்கை கொண்ட சோழபுரத்தில்
சிவனுக்குக் கோயில்!
எண்ணாயிரத்தில்
சுந்தர சோழ ஆழ்வார் கோயில்!
ஈழத்தில் இராசேந்திர சோழப்
பெரும்பள்ளி!
நாகப்பட்டினத்தில் புத்த விகாரைக்குப்
பள்ளிச் சந்தம் உறுதி! என்று
மத நல்லிணக்கத்துக்கும்
முன்மாதிரியாக இருந்திருக்கிறான்!

அதிகார நந்தியும்
அவதார நந்தியுமாக
உலகம்
அல்லாடிக் கொண்டிருக்கும் நிலையில்
இப்போதும்
கற்றுக்கொள்ள நிறையவே
இருக்கின்றன
கங்கை கொண்ட சோழனிடம்!



அன்புடன்
**ம.ரா.**

நன்றி : **கணையாழி**
**ஆகஸ்ட் - 2025**